மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண்.76/2022

**2024–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ம் நாள் திங்கள் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமிதுரை | தொழில் | : கான்டிராக்டர்–Worker |
| தகப்பனார்/கணவர் பெயர் | : லேட்.பொன்னுசாமி | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : பாதாங்கி | சமயம் | : |
| சாதி | : | வயது | :50/2024 |

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1 (i) 12.11.1984 ம் தேதியிட்ட தாவா சொத்தை பொருத்து எனது தகப்பனார் எனது தாயார் தனமணிக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரத்தின் கணினி மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்(அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) கை.களத்தூர் கிழக்கு கிராம தாவா சொத்துக்குரிய பட்டா எண்.1773 மற்றும் 1774–ற்குரிய கூட்டுப்பட்டாக்களின் கணினி மூலம் பெறப்பட்ட நகல்களை தாக்கல் செய்கிறேன், அவை முறையே (அது **வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 22.10.2005 ம் தேதியிட்டு பதிவு செய்யப்பட்ட எனது தாயாரின் இறப்பு சான்றிதழின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.